# 30- வது சாலை பாதுகாப்பு வார விழா - 04.02.2019 முதல் 10.02.2019
## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், வேலூர் மாவட்டம்.
## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நிகழ்ச்சிகள் |
|---|---|
| 04.02.2019 திங்கள் | **சாலை பாதுகாப்பு வார விழா முதல் நாள் நிகழ்ச்சி நடை பேரணி மற்றும் இருசக்கர சக்கர வாகனங்கள் பேரணி நடத்துதல்.**<br>சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் வேலூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் Red Cross, IRT ஓட்டுநர்கள், மாநகர போக்குவரத்து பேருந்து ஓட்டுநர்கள், NSS, ஊர் காவல் படையினர், காவல் துறை ஓட்டுநர்கள், ஓட்டுநர் பயிற்சி உரிமையாளர்கள், வாகன விற்பனை முகவர்கள் புகை பரிசோதனை மைய நிறுவன உரிமையாளர்கள் சுமார் 500 நபர்கள் வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து வெங்கடேஸ்வரா பள்ளி வரை நடை பயணம் மற்றும் வாகன பேரணி நடத்துதல். |
| 05.02.2019 செவ்வாய் | **சாலை பாதுகாப்பு வார விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சி வாகன சிறப்பு தணிக்கை**<br>1.அதிவேகம்<br>2.காற்று ஒலிப்பான் பயன்படுத்துதல்<br>3.அதிக பாரம். |
| 06.02.2019 புதன் | **சாலை பாதுகாப்பு வார விழா மூன்றாம் நாள் நிகழ்ச்சி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல்**<br>ராஜகோபால் பாலிடெக்னிக்கில் மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல். |
| 07.02.2019 வியாழன் | **சாலை பாதுகாப்பு வார விழா நான்காம் நாள் நிகழ்ச்சி மருத்துவ முகாம் நடத்துதல்**<br>சி.எம்.சி மருத்துவர்கள் குழுவினரால் காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை தஞ்சம்மாள் திருமண மண்டபத்தில் பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளின் ஓட்டுநர்கள், அரசு போக்குவரத்து கழக பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் தனியார் பேருந்து ஓட்டுநர்கள், சரக்கு வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா சீருந்து வாகன ஓட்டுநர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் ஆகியோருக்கு இலவச கண் பரிசோதனை, இரத்தம் அழுத்தம், சர்க்கரை அளவு பரிசோதிக்கும் முகாம் நடத்துதல். |

| | |
|---|---|
| 08.02.2019<br>வெள்ளி | **சாலை பாதுகாப்பு வார விழா ஐந்தாம் நாள் நிகழ்ச்சி பள்ளி மாணவர்களுக்கு போட்டி தேர்வு நடத்துதல்.**<br>பள்ளிகளில் மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி விழிப்புணர்வு வாசகங்கள் உருவாக்குதல், ஓவியப்போட்டி வினாடி வினா ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்களை தேர்வு செய்தல். |
| 09.02.2019<br>சனி | **சாலை பாதுகாப்பு வார விழா ஆறாம் நாள் நிகழ்ச்சி விழிப்புணர்வு முகாம் நடத்துதல்**<br>சுங்கச் சாவடிகளில் வாகன ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரசுரங்கள் வழங்குதல், வாகனங்களுக்கு ஒளிரும் பட்டைகள் ஒட்டுதல், சாலை பாதுகாப்பு சம்பந்தமாக அறிவுரைகள் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்துதல். |
| 10.02.2019<br>ஞாயிறு | **சாலை பாதுகாப்பு வார விழா நிறைவு நாள் நிகழ்ச்சி**<br>சாலை பாதுகாப்பு வார விழாவின் நிறைவாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து அனைத்து வகை வாகன ஓட்டுநர்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்குதல் மற்றும் உறுதிமொழி எடுத்தல். |